இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 11-08-2023

# பா.ஜ.க.வின் பாதம் தாங்கி

“பா.ஜ.க.வின் பாதம் தாங்கி பழனிசாமி” – என்று சொன்னால் பழனிசாமிக்கு கோபம் வருகிறது. ஆனால் அவர் பார்த்து வரும் ஒரே வேலை அதுதானே!

டெல்லி மாநிலத்தின் அதிகாரத்தையே பறித்துவிட்டது ஒன்றிய பா.ஜ.க. அரசு. பேரறிஞர் அண்ணாவின் பெயரால் கட்சி நடத்தும் பழனிசாமிக்கு பதற்றம் வரவேண்டாமா? நேற்று காஷ்மீருக்கு நடந்தது. இன்று டெல்லிக்கு நடக்கிறது. நாளை எந்த மாநிலத்துக்கும் நடக்கலாம். ஆனால் பழனிசாமிக்கு அதைப் பற்றி எல்லாம் கவலை இல்லை.

பா.ஜ.க. சொன்னதும், டெல்லிக்கு தன்னுடைய எம்.பி. தம்பிதுரையை அனுப்பினார். தம்பித்துரை, பா.ஜ.க.வின் சட்ட மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்துவிட்டார். இந்த மசோதாவை ஆதரித்துப் பேசிய தம்பித்துரை, ‘அமித்ஷாவுக்காகத்தான் நாங்கள் ஆதரித்து வாக்களித்தோம்’ என்று பேசி இருக்கிறார். இது பாதம் தாங்கி பழனிசாமிக்குத் தெரியுமா?

“மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில முதலமைச்சரின் அதிகாரத்தைக் குலைக்கும் இந்த மசோதாவை, பேரறிஞர் அண்ணாவின் பெயரால் கட்சி நடத்தும் அடிமைக் கூட்டம் ஆதரித்து மாநிலங்களவையில் வாக்களித்திருப்பது எனக்கு அதிர்ச்சி அளிக்கவில்லை. ‘நான் யாருக்கும் அடிமை இல்லை’ என்ற படியே பா.ஜ.க.வின் பாதம் தாங்கி கொத்தடிமையாக தரையில் ஊர்ந்து கொண்டிருக்கிறார் பழனிசாமி என்பதையே இது வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னதில் என்ன தவறு இருக்க முடியும்? இதற்கு எதிராக அறிக்கை வெளியிட்டு இருக்கும் பழனிசாமியால், டெல்லி அரசுக்கு எதிரான மசோதாவை நியாயப்படுத்த முடிந்ததா?

**டெல்லி மாநிலத்தையே சிதைக்கும் சட்டத்தை பா.ஜ.க. அரசு நிறைவேற்றி இருக்கிறது. இதன் மூலம் அதிகாரிகள் நியமனம், பணியிட மாற்றம் ஆகியவற்றை அந்த மாநில அரசு செய்ய முடியாது. ‘தேசிய சிவில் சேவை ஆணையம்’ என்ற அமைப்பு தான் செய்ய முடியும். இந்தக் குழுவில் மாநில அரசுடன் இணைந்து ஒன்றிய அரசு அதிகாரிகளும் இருப்பார்கள். இவர்கள் முடிவெடுத்து துணை நிலை ஆளுநருக்கு அனுப்ப வேண்டும். இதனை ஏற்பதும் மறுப்பதும் ஆளுநரின் விருப்பம் ஆகும்.**

**தனது சொந்த விருப்பத்தின் பேரில் டெல்லி சட்டசபையை ஆளுநர் கூட்டலாம். பேரவை நடக்கும் நாட்களை கூட்டலாம். குறைக்கலாம்.**

**அரசின் நிர்வாகத்தில் குறைபாடு இருந்தால் அதனை அமைச்சருக்குச் சொல்லாமல், நேரடியாக ஆளுநருக்கு அதிகாரிகள் கொண்டு போகலாம்.**

**அதிகாரிகள், வாரியங்கள், ஆணையங்கள், சட்டபூர்வ அமைப்புகள் அமைக்கும் அனைத்து அதிகாரமும் ஆளுநருக்கே உண்டு.**

**– இதுதான் அந்தச் சட்டம். மொத்தமாகச் சொன்னால், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் முதலமைச்சருக்கோ, அமைச்சர்களுக்கோ, அமைச்சரவைக்கோ எந்த அதிகாரமும் இல்லை. டம்மியாக உட்கார்ந்து இருப்பார்கள்.**

ஆம் ஆத்மி ஆட்சியில் இருக்கிறது, அரவிந்த் கெஜ்ரிவால் அசைக்க முடியாதவராக இருக்கிறார், ‘இந்தியா’ கூட்டணியில் அங்கம் வகித்து அந்தக் கூட்டணியை பலப்படுத்தி வருகிறார் என்பதற்காகவே டெல்லி மாநில அரசை டம்மி ஆக்கி இருக்கிறார்கள். இதனை விட டெல்லி மாநிலத்துக்கு துரோகம் செய்ய முடியுமா? மாநிலங்களுக்கு துரோகம் செய்ய முடியுமா? இந்திய அரசியலமைப்புக்கு துரோகம் இழைக்க முடியுமா? இந்த துரோகத்துக்கு துணை போகும் காரியத்தைத் தான் பழனிசாமி செய்து கொண்டு இருக்கிறார். இது அவருக்கு ஒன்றும் புதிதல்ல. பதவி கொடுத்த சசிகலா, காலையே வாரியவர் அல்லவா அவர்!

குடியுரிமைச் சட்டத்தை மாநிலங்களவையில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்து இருந்தால் அந்தச் சட்டமே நிறைவேறி இருக்காது. பா.ம.க. உறுப்பினர் அன்புமணி மற்றும் 10 அ.தி.மு.க. எம்.பி.க்களின் ஓட்டுதான் குடியுரிமைச் சட்டம் நிறைவேறக் காரணம். இப்போதும் பா.ஜ.க. கொண்டு வந்த டெல்லி மாநிலத்தைச் சிதைக்கும் சட்டத்தை அ.தி.மு.க.வும் ஆதரித்துள்ளது. பா.ம.க.வும் ஆதரித்து வாக்களித்துள்ளது.

மக்களுக்கும், மக்களாட்சிக்கும் துரோகம் இழைப்பதை வழக்கமாக வைத்திருப்பவர்தான் பழனிசாமி.

★ ‘நீட்’ தேர்வுக்கு ஆதரவு

★ ‘உதய்’ மின் திட்டத்துக்கு ஆதரவு

★ ‘ஒரே நாடு ஒரே ரேஷன்’ திட்டத்துக்கு ஆதரவு

★ பல்கலைக் கழக வேந்தர்களை ஆளுநராக நியமிப்பதற்கு ஆதரவு

★ குடியுரிமைச் சட்டத்துக்கு ஆதரவு

★ மூன்று வேளாண் சட்டங்களுக்கு ஆதரவு – இப்படி பா.ஜ.க. பாதையில்தான் பயணம் செய்து கொண்டிருக்கிறார் பழனிசாமி. அந்தக் கட்சி நடத்திய கூட்டணிக் கட்சிக் கூட்டத்தில் பிரதமர் நரேந்திரமோடிக்குப் பக்கத்தில் நிற்க வைக்கப்பட்டாரே பழனிசாமி. ஆனால் அவருக்கு ஏதோ – பா.ஜ.க.வுடன் இருக்கிறோம் – என்று சொல்லிக் கொள்வதற்கு வெட்கமாக இருக்கிறது போலும்!

‘நானும் ஒரு விவசாயி’ என்று சொல்லிக் கொண்டே மூன்று வேளாண் சட்டங்களை ஆதரித்தாரே பழனிசாமி. அது கொத்தடிமைத் தனத்தின் வெளிப்பாடு அல்லவா? ‘அது மிக நல்ல சட்டம், அது பற்றி நான் விவாதிக்கத் தயார், என்னிடம் விவாதிக்க வாருங்கள்’ என்று நிருபர்களையே சவாலுக்கு அழைத்தாரே பழனிசாமி. அது கொத்தடிமைத் தனத்தின் உச்சம் அல்லவா?

“அண்ணாமலையைப் பற்றி என்னிடம் கேள்வி கேட்காதீர்கள்” என்று நிருபர்களிடம் சீறிய பழனிசாமி, டெல்லியில் பம்மிக் கிடப்பது ஏன்?

●●



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.8.2023) சென்னை, நுங்கம்பாக்கத்திலுள்ள பள்ளிக் கல்வித் துறையின் பேராசிரியர் க.அன்பழகன் கல்வி வளாகத்தில், புதிதாக நிறுவப்பட்டுள்ள இனமானப் பேராசிரியர் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், பேராசிரியர் அவர்களின் குடும்பத்தினர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### பள்ளி கல்வித்துறையின் போராசிரியர் க.அன்பழகன் கல்வி வளாகத்தில்

# இனமானப் பேராசிரியர் திருவுருவச் சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஆக. 11 –

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.8.2023) சென்னை, நுங்கம்பாக்கத்திலுள்ள பள்ளிக்கல்வித் துறையின் பேராசிரியர் க.அன்பழகன் கல்வி வளாகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள பேராசிரியர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார்.

**அண்ணா – கலைஞரால் போற்றப்பட்ட பேராசிரியர்!**

பேரறிஞர் அண்ணா அவர்களால் “பேராசிரியர் தம்பி” என்று அன்போடும், ‘இனமான பேராசிரியர்’ என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பெருமிதத்தோடு அழைத்துப் போற்றப்பட்டவர் பேராசிரியர் க. அன்பழகனார் அவர்கள். பள்ளிப் பருவத்திலேயே தமிழ் மொழியின் மீது தணியாத தாகம் கொண்டு அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியம் முதுகலைப் பட்டப் படிப்பை முடித்தார்.

பேராசிரியர் அவர்கள், பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற நாட்களிலும், துணைப் பேராசிரியராகப் பணியாற்றிய காலங்களிலும் திராவிட இயக்கத்தின்பால் பெரிதும் ஈர்க்கப்பட்டு, பொது வாழ்க்கையில் தன்னைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டார். 1962 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், 1967 ஆண்டு தொடங்கி 1971 ஆம் ஆண்டு வரை நாடாளுமன்ற உறுப்பினராகவும், தொடர்ந்து 9 முறை சட்டமன்ற உறுப்பினராகவும் திறம்படப் பணியாற்றியுள்ளார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற காலத்தில் மக்கள் நல்வாழ்வு, சமூக நலத்துறை, நிதி மற்றும் கல்வித் துறை அமைச்சராக, தான் அமைச்சராக பதவி வகித்த துறைகளில் எல்லாம் தனது முதிர்ந்த அனுபவத்தாலும், பரந்த தொலைநோக்குப் பார்வையாலும் பல்வேறு திட்டங்களைத் திறம்பட செயல்படுத்தினார்.

**தலைசிறந்த கல்வியாளர் பேராசிரியர் பெருமகனார்!**

தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவரும், தலைசிறந்த கல்வியாளருமான பேராசிரியர் அவர்களின் நூற்றாண்டு நினைவைப் போற்றும் வகையில் கடந்த 30.11.2022 அன்று முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பில், பேராசிரியர் அன்பழகன் அவர்களின் நூற்றாண்டு நினைவைப் போற்றும் வகையில் பள்ளிக் கல்வி துறை வளாகத்தில் பேராசிரியர் அன்பழகனார் அவர்களின் திருவுருவச்சிலை நிறுவப்பட்டு, அவ்வளாகம் “பேராசிரியர் க.அன்பழகன் கல்வி வளாகம்” என்று அழைக்கப்படும் என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில், கடந்த 19.12.2022 அன்று சென்னை, நுங்கம்பாக்கத்திலுள்ள பள்ளிக் கல்வி துறை வளாகத்தில் நடைபெற்ற பேராசிரியர் க.அன்பழகன் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில், அவ்வளாகத்திற்கு “பேராசிரியர் க. அன்பழகன் கல்வி வளாகம்” எனப் பெயர் சூட்டி, பேராசிரியர் க. அன்பழகன் நூற்றாண்டு நினைவு வளைவினையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**பள்ளி கல்வி வளாகத்தில் பெயர் சூட்டி, சிலை திறந்த முதல்வர்!**

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் சென்னை, நுங்கம்பாக்கத்திலுள்ள பள்ளிக்கல்வித் துறையின் பேராசிரியர் க.அன்பழகன் கல்வி வளாகத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள பேராசிரியர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, அச்சிலை அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றியழகன், துணை மேயர் மு. மகேஷ் குமார், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு. இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், இனமானப் பேராசிரியர் அவர்களின் புதல்வர் அன்புச்செல்வன் உள்ளிட்ட குடும்பத்தினர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கல்வியில், பகுத்தறிவில், சுயமரியாதை உணர்வில்

# சிறந்த தமிழ்நாட்டைக் கட்டி எழுப்ப

# பேராசிரியப் பெருந்தகை சிலை முன்பு உறுதி ஏற்கிறோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, ஆக.11–

சென்னை–நுங்கம்பாக்கம், பேராசிரியர் க.அன்பழகன் கல்வி வளாகத்தில், நேற்று காலை, இனமானப் பேராசிரியர் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து சமூக வலைதளப் பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “கல்வியில், பகுத்தறிவில், சுயமரியாதை உணர்வில் சிறந்த தமிழ் நாட்டைக் கட்டி எழுப்ப, பேராசிரியர் பெருந்தகை சிலை முன்பு உறுதி ஏற்போம்!” என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆகஸ்ட் 10, 1948 ஆதிக்க இந்திக்கு எதிராக மொழிப் போராட்டம் தொடங்கிய இந்நாளில், இனமானம் காக்கவும் மொழி உரிமையை நிலைநாட்டவும் உழைத்த பேராசிரியர் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:–

**ஆகஸ்ட் 10 ஆதிக்க இந்திக்கு எதிராக 1948ஆம் ஆண்டு மொழிப்போராட்டம் தொடங்கிய நாள் இன்று. வரலாற்றில் இரண்டாவது மொழிப் போராட்டத் தொடக்க நாளாகவும் பதிவாகி உள்ளது.**

**இனமானம் காக்கவும் மொழி உரிமையை நிலை நாட்டவும் எந்நாளும் உழைத்த இனமானப் பேராசிரியப் பெருந்தகையின் முழு உருவச் சிலையை, சென்னை நுங்கம்பாக்கத்தில் அவரது பெயரால் அமைந்துள்ள கல்வி வளாகத்தில் இன்று திறந்து வைத்தேன்.**

**பேராசிரியப் பெருந்தகையின் சிலை அமைக்கப் பொருத்தமான இடமும் பொருத்தமான நாளும் இதைத் தவிர வேறு இருக்க முடியாது.**

**கல்வியில் பகுத்தறிவில் சுயமரியாதை உணர்வில் சிறந்த தமிழ் நாட்டைக் கட்டி எழுப்ப பேராசிரியப் பெருந்தகை சிலை முன்பு உறுதி ஏற்கிறோம்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

